பல அரிய தமிழ் நூல்கள் ஒரு முறை சுவடி நூல்களிலிருந்து அச்சுப் பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்ட பின்னர் மறுபதிப்பிற்கு வருவதில்லை. இப்படி பல நூல்கள் நாள் செல்லச் செல்ல மறக்கப்பட்ட ஒன்றாகிப் போவதோடு தாட்கள் கிழிந்து, மக்கிப் போய் அழிந்தும் விடுகின்றன. இவை மின்னாக்கம் செய்யப்படும் போது இவ்வகையில் அழிவதிலிருந்து பாதுகாக்கப்படுவதோடு நமது பயன்பாட்டிற்கும் கிடைக்கின்றது. தமிழ் மரபு அறக்கட்டளை இவ்வகை நூல்களை அதன் அசல் வடிவம் மாறாத வகையில் வருடி(scanner) மற்றும் புகைப்படக் கருவிகளைப் பயன்படுத்தி மின்பதிவுகளை உருவாக்கி வருகின்றது. அவ்வகையில் 19ம் நூற்றாண்டு நூல்கள், 20ம் நூற்றாண்டின் ஆரம்ப கால நூல்கள் என குறிப்பிடத்தக்க பல நூல்கள் மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டு நமது வலைப்பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஓலைச் சுவடிகள் மின்பதிப்பாக்கம்

தமிழ் அச்சுப் பதிப்புக்கள் தோன்றுவதற்கு முன்னர் பனை ஓலைகளில் நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. இவ்வகை சுவடி நூல்கள் அனைத்தையும் அச்சு வடிவில் பதிப்பிக்க பல தமிழறிஞர்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் பெருமளவில் தொடர்ந்து முயன்று அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர். ஆனால் இதனை வைத்து அனைத்து தமிழ் சுவடி நூல்களும் அச்சு வடிவம் பெற்று வெளி வந்துள்ளன என்று கூறி விட முடியாது. ஆக மின்பதிப்பாக்க முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் போது அழியக் கூடிய நிலையிலுள்ள பல அறிய நூல்களை நாம் பாதுகாத்து நமது அடுத்த சந்ததியினருக்கு அதனை வழங்குவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

தமிழகம் மற்றும் அயல்நாடுகளில் உள்ள பல்வேறு நூலகங்களில் ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு படிப்படியாக நூல் வடிவம் பெற்று வந்தாலும் அனைத்து ஓலைச் சுவடிகளும் முழுமையாக அச்சு வடிவம் பெறாத நிலையே உள்ளது. ஆக சுற்றுச் சூழல், சுகாதார பிரச்சனைகள், முறையான சுவடி நூல் பாதுகாப்பு பற்றிய தொழில் நுட்ப திறன் இல்லாமை போன்ற காரணங்களினால் தொடர்ந்து பல சுவடி நூல்கள் அதன் சுவடு தெரியாமல் அழிந்துள்ளன. இதனைப் போக்க இவ்விஷயம் தீவிர கவனத்திற்குட்படுத்தப்பட்டு சுவடி நூல்கள் அச்சுப் பதிப்பாக்கமும் மின்பதிப்பாக்கமும் பெற வேண்டிய அவசியம் நிச்சயமாக உள்ளது.

தமிழகத்திற்கு அயல்நாட்டவரின் வருகையால் ஏற்பட்ட பல்வேறு தாக்கங்களில் பனை ஓலைச் சுவடிகளிலிருந்து நூல்களைத் தற்கால தமிழுக்குக் காகித வடிவில் அச்சுப் பதிப்பாக மாற்றம் செய்ய ஏற்பட்ட முயற்சிகளும் அடங்கும். தமிழ் நாட்டில் அச்சில் வெளிவந்த முதல் தமிழ் நூல் திருக்குறள் என்பதும் 1835ம் ஆண்டு வரை நூல்கள் அச்சிடுவதற்கு அரசின் தடை இருந்ததும், 1835க்குப் பின்னர் இந்தத் தடை நீக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க விஷயங்கள். அரசாங்கத்தின் இந்தத் தடை இருந்த போதிலும் தமிழரறிஞர்கள் பலரது தீவிர உழைப்பின் காரணமாக பல சுவடி நூல்கள் அச்சில் வெளிவந்தன. (**சுவடிப்பதிப்பியல்**, *டாக்டர்.வே.மாதவன்*)

இதில் குறிப்பிடத்தக்கவையாக திருநெல்வேலி அம்பலவாண கவிராயரின் முயற்சியில் 1812ல் முதன் முதலில் அச்சில் வெளிவந்த திருக்குறள் மூலபாடம், நாலடியார் மூலபாடம் ஆகியவற்றினைக் கூறலாம். இப்படி சுவடி நூல்களைப் பனை ஓலையிலிருந்து அச்சு வடிவத்திற்கு கொண்டு வர உதவியவர்களில், குறிப்பிடத்தக்கவர்கள், தணிகைமணியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், பேராசிரியர் உ.வே.சாமிநாதையர், திருவாரூர் வி.கல்யாணசுந்தரனார், மகாவித்துவான் மு.இராகவையங்கார், யாழ்ப்பாணம் வை.தாமோதரம் பிள்ளை, திரிகோணமலை த.கனகசுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணம் சபாபதி நாவலர், யாழ்ப்பாணம் அம்பலவாண பண்டிதர், தாண்டவராய முதலியார், புதுவை நயனப்ப முதலியார், அ.முத்துசாமிப்பிள்ளை, யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வடலூர் இராமலிங்க அடிகள், தாண்டவராய முதலியார்,, பேராசிரியர் எஸ் வையாபுரிப்பிள்ளை போன்றோர்.

இவர்கள் மட்டுமன்றி மேலும் பல பதிப்பாசிரியர்களின் துணையினால் தான் கடந்த நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட நூல்களில் சில இன்றளவும் நமக்கு வாசிக்கக் கிடைக்கின்றன. பதிப்பாசிரியர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலை த.ம.அறக்கட்டளையின் கீழ்க்காணும் வலைப்பக்கத்தில் காணலாம். (http://www.tamilheritage.org/manulogy/pubs/pubs.html)

தமிழ் மரபு அறக்கட்டளை தனியார் பாதுகாப்பிலுள்ள, இதுவரை அச்சில் வெளிவராத பனை ஒலை நூல்களை மின்பதிப்பு செய்து அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் ஓலைச் சுவடி மின்பதிப்பாக்க முறை என்பது ஐந்து படி நிலைகளில் பிரிக்கப்பட்டு செயல்முறையாக்கம் பெற வேண்டும் என்பத பரிந்துரைக்கின்றது.

1. ஓலைச் சுவடிகளைப் பெறுவது மற்றும் சேகரிப்பது.
2. சுவடி நூல்களை இனம் பிரிப்பது. மருத்துவம், ஸ்தல புராணம், கதைகள், செய்திகள், ஆவணங்கள், தொழில் நுட்பம், ஓவியம், சமய நூல்கள், சங்க இலக்கியங்கள் என வகை பிரிப்பது.
3. மூன்றாவது நிலையாக சுவடி நூல்களை மின்பதிப்பு செய்வது. வருடியால் மின்பதிப்பாக்கம் செய்து தகுந்த கணினி தொழில் நுட்பத்தின் அடிப்படையில் நூல்களின் பக்கங்களைக் கோப்புக்களாகச் சேகரித்து மின்னூலாக பிரசுரிப்பது.
4. இந்த மின்பதிப்பு செய்யப்பட்ட ஓலைகளை, ஓலைச் சுவடி நூல்களை வாசிக்கத் தெரிந்த அறிஞர்களைக் கொண்டு வாசிக்க வைத்து, அதனை ஒலிப்பதிவு செய்வது, மற்றும் எழுத்துக்களை அதாவது முழு நூலையும் தற்கால தமிழுக்கு மாற்றம் செய்வது.
5. இந்த ஒலிப் பதிவுகளையும், தட்டச்சு செய்யப்பட்ட நூலையும் மின்பதிப்பாக்கம் செய்து நிரந்தரப்படுத்துவது, வாசிப்புக்குட்படுத்துவது.

அச்சு வடிவ பழம் நூல்களின் மின்பதிப்பு

பனை ஓலை நூல்கள் அச்சுப்பதிப்புக்கு வந்தாலும் முழுமையாக அந்நூல் பாதுகாக்கப்பட்டு விட்டது என்று கூறுவதற்கில்லை. ஓலையிலிருந்து அச்சு வடிவத்தில் பதிப்பு கண்ட பல நூல்கள் மறு பதிப்புக் காணாத நிலையும் உள்ளது. பல நூல்கள் பாதுகாப்பு இன்மையால் தாட்கள் மடிந்து, இக்கிப் போய் நொறுங்கி உடைந்து விடும் நிலையும் உள்ளது. ஆக ஒரு நூல் அச்சுப் பதிப்பினை அடைந்தாலும் அது மின்பதிப்பாக்க முறையில் பதிப்பிக்கப்படும் போது அதனைத் தற்கால தொழில் நுட்பத்தைக் கொண்டு எளிய முறையில் பாதுகாக்க முடிகின்றது. ஆகவே அச்சு வடிவ நூல்களையும் பாதுகாக்க வேண்டிய நிலை இருப்பதால் மின்பதிப்பாக்கம் இதற்கு ஒரு சிறந்த வழியாக அமைகின்றது.

வாய்மொழி இலக்கியங்கள், கலைகள், மின்பதிப்பு

தமிழர் கலை கலாச்சார பண்பாட்டு வாழ்க்கை முறை சம்பந்தப்பட்ட பல்வேறு தகவல்கள் இன்றளவும் கூட முழுமையாக பதிப்பிக்கப்படவில்லை என்பதை மறுக்கமுடியாது. கிராமங்களில் முன்னர் வழக்கிலிருந்த விஷயங்கள் பல படிப்படியாக, நகர்ப்புற வாழ்க்கை மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் காரணத்தால் கொஞ்சம் கொஞ்சமாக வழக்கு ஒழிந்து வருகின்றன. இது முற்றிலும் தடுக்கப்பட முடியாத ஒன்று. ஆனால் இந்த வாய்மொழி இலக்கியங்களை நமது பண்பாட்டின் வரலாற்று ஆவணங்களாகப் பதிப்பிக்க கூடிய தொழில் நுட்பம் இன்று கிடைத்துள்ள வேளையில் இதனை நாம் இத்தொழில் நுட்பம் கொண்டு பாதுகாக்க முடியும்.

உதாரணமாக வாய்மொழி இலக்கியங்களான தாலாட்டுப் பாட்டு, ஒப்பாரிப் பாட்டு, கும்மி, அம்மானை போன்றவை, மற்றும் கிராமத்து சட்ட திட்டங்கள், பஞ்சாயத்து, பாரம்பரிய உணவுகள், பாட்டி வைத்தியம், மூலிகைகளின் சிறப்புக்கள், பாண்டி, சில்லாட்டம், அம்மானை, பள்ளாங்குளி போன்ற கிராமிய விளையாட்டுகள், நாடகக் கூத்துக் கலைகளான கரகாட்டம், ஒயிலாட்டம், பறையாட்டம், சிலா ஆட்டம் போன்றவை அயல் நாடுகளுக்குக் குடி பெயர்ந்து விட்ட தமிழர்களுக்கு மட்டுமின்றி தமிழகத்திலேயே கூட வழக்கில் இல்லாத கலாச்சார பிம்பங்களாக உருவாகி உள்ளன. இவ்வகை வாய்மொழி இலக்கியங்களை, அதன் நுணுக்கங்களை விளக்கும் தகவல்களை ஒலிப்பதிவுகளாகச் சேகரித்து வைக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதனை கடுத்தில் கொண்டு, செய்தித் தகவல்கள், ஒருவரது பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த வரலாற்று விஷயங்களின் தகவல்கள், தனிப்பட்ட சிந்தனையின் வெளிப்பாடுகள் கலை வடிவங்கள் போன்றவற்றை வாய்மொழி பதிவுகளின் தொகுப்பாக (Oral history archive) உருவாக்குவதில் தமிழ் மரபு அறக்கட்டளைத் தொடர்ந்து ஈடுபட்டு வருவதோடு இது தொடர்பான தொழில்நுட்ப விஷயங்களை அலசுவதிலும் மின்தமிழ் மற்றும் இ-சுவடி மின்னரங்கங்களின் வழியாக கலந்திரையாடல்களையும் நிகழ்த்தி வருகின்றது.

ஒரு இனத்தின் முக்கிய அம்சங்களாகத் திகழ்பவை அந்த இனத்தின் பண்பாட்டு விழுமியங்கள். வரலாற்று விஷயங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு, தகுந்த முறையில் தொகுத்து பராமரித்து வைக்கப்படும் போதே அந்த இனத்தின் சிறப்புகள் பாதுகாக்கப்படுகின்றன. ஆக, தமிழ் இனத்தின் சிறப்புகளை, சிந்தனை ஆழத்தைப், பண்பாட்டுக் கூறுகளை, கலைகளின் பெருமிதத்தை நாம் சுலபமாகக் கருதி விட்டு விடாமல், அதன் சுவடுகள் மறக்கப்படும் முன்னர் அவற்றைத் தக்க முறையில் பாதுகாத்து வைக்க வேண்டும் என்பது தமிழ் மரபு அறக்கட்டளையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. இந்தக் கலைகள் வருங்காலங்களில் வழக்கில் இல்லாமல் போனாலும் இவை இருந்ததற்கான அடையாளங்களாவது இவ்வகை மின்பதிப்புகளின் வழி பாதுகாக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உண்டு.

மின்பதிப்பாக்க வழி முறைகள், தொழில் நுட்பக் கூறுகள்

எந்த ஒரு மின்னூல் மின்பதிப்பாக்க நடவடிக்கைக்கும் அடிப்படையாக அமைவது அதன் தொயழில்நுட்ப அடிப்படைக் கூறுகள். மின்பதிப்பு செய்யப்படும் ஒவ்வொரு பக்கமும் துல்லியமாகவும் தெளிவாகவும் வாசிப்புக்கு உகந்ததாகவும் இருக்க வேண்டியது மின்பதிப்பாக்கத்தின் அடிப்படை தேவைகளில் மிக முக்கியமான ஒன்று. மின்னூல்கள் பதிப்பாக்கம் என்பது தற்சமயம் வருடி(scanner) பயன்படுத்தி மின்பதிப்பாக்கம் செய்வது அல்லது புகைப்படக் கருவி பயன்படுத்தி மின்பதிப்பு செய்வது என்ற இரண்டு நிலைகளில் உருவாக்கப்படக் கூடிய சாத்தியம் உள்ளது.

ஒரு நூல் வருடியில் வைத்து பக்கங்கள் திருப்பப்பட்டு மின்பதிப்பு செய்யும் போது சில வேலைகளில் பக்கங்கள் உடைந்து விடும் நிலை உண்டு. பழம் நூல்கள் மின்பதிப்பு செய்யும் போது நூல்களின் பக்கங்கள் உடைந்து விடுவதிலிருந்து தடுக்க புகைப்படக் கருவி பயன்படுத்தி மின்பதிப்பு செய்வது தற்போது வழக்கத்தில் உள்ள சிறந்த முறை என்று கூறலாம். பனை ஓலைச் சுவடி மின்பதிப்பிற்கு வருடி பயன்படுத்தி மின்பதிப்பு செய்வது எளிமையானதாகவும் அதே சமயம் உகந்ததாகவும் அமைகின்றது.

பக்கங்களின் தன்மைகள்

மின் நூல்கள். மின்பதிப்பு செய்யபடும் போது பொதுவாக ஒரு மின்பதிப்பு வடிவம் jpg, tiff, png, gif வடிவங்களில் உருவாக்கப்பட்டே சேமிக்கப்படுகின்றன. உதாரணமாக வருடி பயன்படுத்தி உருவாக்கப்படும் மின் நூல்களின் பக்கங்கள் பெரும்பாலும் பட வடிவ கோப்புக்களுக்குப் புகழ் பெற்ற jpg வடிவத்தில் தான் உருவாக்கப்படுகின்றன. jpg முறை புகைப்படங்களில் அதிலும் தத்ரூபமான படங்களில் சிறிய மாறுபாடுகளையும் உள்வாங்கி அதன் அசல் வடிவத்தை மின்பதிப்பு வடிவங்களில் கொண்டு வருவதில் சிறந்த தன்மையைக் கொண்டது. புகைப்படக் கருவிகளில் எடுக்கப்படும் மின்பதிவுகள் இந்த compression வடிவத்தை பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டவை.

அடிப்படையில் jpg பதிவுகள் மின்பதிவின் போது தகவல்களை இழக்கக் கூடிய தன்மை கொண்டவை (lossy compression method). இதனால் jpg வடிவ compression மிகத்துல்லியமான பதிவுகளுக்கு, உதாரணமாக வரைபடங்கள், சுவடிகளில் உள்ள வரி வடிவங்கள் போன்றவற்றிற்கு உகந்தவையல்ல. மின்னாக்கம் செய்யப்படுகின்ற பல பழம் நூல்கள் பல வேளைகளில் மிகச் சிதைந்து சில பகுதிகளில் எழுத்துக்கள் தெளிவில்லாத நிலையிலும் கூட மின்பதிப்பு செய்ய வேண்டிய நிலை உள்ளது. ஆக இவ்வகை நூல்களைக் கருத்தில் கொண்டால் வரி வடிவ மின்பதிப்புக்கு உகந்த compression முறையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. tiff மற்றும் png முறைகள் இவ்வகை தேவைகளுக்கு மிக உகந்தவை. பொதுவாகவே நூல்கள் மின்பதிப்பாக்கம் என்பது வரிவடிவ அசல் பக்கத்தின் ஒரு மறுபதிப்பு. இதற்கு மிகத் தகுந்த முறை tiff compression ஆகும். அதிலும் குறிப்பாக OCR (optical character recognition) கொண்டு இந்த நூல்கள் பின்னர் வாசிப்பில் உட்படுத்த tiff compression பயன்படுத்தி சேமிக்கப்பட்ட கோப்புக்களே சிறந்தவையாக அமைகின்றன.

மின்பதிப்பாக்கத்தில் சந்திக்கக்கூடிய தொழில்நுட்ப பிரச்சனைகளைக் கையாள பொதுவான கையேடுகள் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. கணினி கொள்ளளவு விலை அதிகம்

இல்லையென்ற நிலை இப்போது இருந்தாலும் மின்னூல்கள் தரவிறக்கத்திற்காக தேவைப்படும் நேரம் அதிகமாக இருப்பது ஒரு வகை பிரச்சனையாக உள்ளது. இதனை மேலும் செம்மைப் படுத்த தகுந்த தொழில்நுட்ப கையேடுகள் இருப்பது அவசியமாகின்றது. அதே போல ஒலி ஒளி வடிவ பதிவுகளை இணையத்திலிருந்து துரிதமாக தரவிறக்கம் செய்வதற்கும் கோப்புக்களின் அளவில் கவனம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. இதனைக் கையாள, கையேடுகள் உருவாக்கப்படுதல் அவசியமாகின்றது. இதற்கு pdf மற்றும் djVu தொழிநுட்பங்கள் சிறந்தவையாக இருக்கின்றன.

மின்பதிப்பு செய்ய விரும்புபவர்களுக்குப் பெரும்பாலும் தொழில்நுட்ப அடிப்படை விஷயங்களில் பல்வேறு ஐயங்கள் இருப்பது இயல்பு. இதனை நிவர்த்திக்க எளிய கையேடுகளைத் தமிழ் மரபு அறக்கட்டளை உருவாக்கி வெளியிட்டுள்ளது. அந்த வகையில் இதுவரை அடிப்படை மின்பதிப்பாக்கம், FTP செய்வது எப்படி எனும் கையேடு மற்றும் ஒலிப்பதிவு கட்டுரை, மின் நூல்களைப் புகைப்படக் கருவி கொண்டு உருவாக்கும் விதம், ஒலிப்பதிவுகள் மற்றும் குரல் அரட்டை ஒலிப்பதிவு விளக்கக் கட்டுரைகள், தமிழில் மின்னஞ்சல் செய்யும் முறை அடிப்படை கையேடு, மின்னூலாக்கக் கையேடு போன்றவை வெளியிடப்பட்டு மின் நூலாக்கத்திலும் மின்பதிவுகளிலும் ஆர்வமுள்ளோர் பயன்படுத்தும் வகையில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மரபு அறக்கட்டளையின் அடுத்த கட்ட முயற்சிகள்.

ஒருங்கிணைக்கப்பட்ட மின்னூல்களுக்கான அட்டவணை மற்றும் ஓலைச் சுவடிகளுக்கான பேரட்டவணை

மின் நூல்களை வெளியிடும் தன்னார்வக் குழுவினர் பலர் தற்போது தமிழ் மின்னூல்களை உருவாக்குவதில் ஈடுபாட்டுடன் இயங்கி வருகின்றனர். பல்வேறு குழுவினர் 'தமிழ் நூல்கள் மின்பதிப்பாக்கம்' என செயல்படத் தொடங்கும் போது ஒருவர் மின்பதிப்பு செய்த அதே நூலை வேறொருவர் செய்வதற்கான நிலை ஏற்பட வாய்ப்புண்டு. ஆக தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள் குறித்த ஒரு தகவல் வங்கி உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்பதால் இந்த முயற்சி தொடங்கப்பட்டு தேடு இயந்திரம் மற்றும் வரிசைப்படுத்தும் சாத்தியத்துடன் கூடிய பட்டியல் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அதே வேளை இணையத்தில் உள்ள அனைத்து மின்னூல்களுக்குமான ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு அட்டவணை உருவாக்கப்பட வேண்டிய தேவை இருப்பதால் இவ்வகை முயற்சிகளுக்கும் தமிழ் மரபு அறக்கட்டளை துணை நிற்கின்றது.

பணை ஓலைச் சுவடிகள் தமிழகத்திலும் அயல் நாடுகளிலுமுள்ள பல்வேறு நூலகங்களிலும் உள்ளன. இவற்றைப் வாசிப்புக்கு உட்படுத்தும் அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. தொடர்ந்து பல நிறுவனங்கள் சுவடிகளின் தகவல்களைச் சேகரிக்கும் முயற்சிகளில் இயங்கி வந்தாலும் இதுவரை சேகரத்திலுள்ள அனைத்து சுவடிகளுக்குமான முழுமையான ஒரு பட்டியல் இல்லாதது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அத்தோடு இதுவரை கண்டெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகளுக்கான ஒரு பேரட்டவணையும் இணையத்தில் ஒருங்குறியில் தேடுதல் (digital searchable catalogue) வசதியுடன் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. இவ்வகையிலான முயற்சிகளுக்கான ஆரம்பப்பணிகளை தமிழ் மரபு அறக்கட்டளை இப்போது தொடங்கியுள்ளது.

Tamil Inscriptions and on line search

Database Compilation, Grammatical analysis, Lexicon and Translation

Appasamy Murugaiyan
Ecole Pratique des Hautes Etudes –Section des Sciences historiques et philologiques, Paris.
a.murugaiyan@wanadoo.fr

Abstract: This is a description of a database tool for the analysis of a small linguistic corpus. It aims at representing syntactic and semantic information at both clause and argument levels in their sociolinguistic components. This paper summarizes the categories that are encoded, and describes how they are encoded. Few examples to show their usage are also provided here as an illustration.

Introduction

The use of large computerized bodies of text for linguistic analysis has emerged in recent decades as one of the most significant fields in the study of language. This project is the result of our experience for more than a decade of teaching and conducting research in Tamil epigraphy. The major aim of this project is to make the Tamil inscription database accessible to people and researchers in a variety of fields (e.g. linguistics, anthropology, sociology, archaeology, folklore, history, art history, religion etc.), both native and non-native speakers of the Tamil language. A corpus based linguistic analysis lays emphasis on the importance of empirical data. Empirical data alone would enable researchers to make objective statements, rather than those that are subjective based upon one's own perception of language and society.

The structure of the epigraphic text is complex and the order of constituents is motivated by pragmatics (Information structure) rather than by syntax. Tamil inscriptions consist of a large number of technical vocabularies, some are native Tamil lexemes, some are coined in Tamil, some are loan words from Indo-Aryan, and yet some others are compounds of both Tamil and Indo-Aryan lexemes. All of these features of epigraphic texts constitute a major challenge for any body working with Tamil inscriptions. In order to overcome these complexities, we felt the need for a specific tool –grammatical and lexical- for reading and analyzing Tamil inscriptional texts.

Aim

The aim of this project includes: (1) to archive Tamil epigraphic texts, (2) to present the data in a queryable format in order to extract linguistic information, (3) to compile a dictionary with an electronic interface, based on this queryable format, (4) to write a historical grammar of the Tamil language based on the database and 5) to contribute to the field of Dravidian historical linguistics.

Linguistic analysis, as broadly conceived, includes not only phonological, morphological, and grammatical information, but also includes sociolinguistic components as well. It aims above all to examine the usage and change of language in its real context. This linguistic database includes several features: phonological (texts in transliteration based on the Madras University Tamil lexicon), different scripts (vaṭṭeḻuttu, grantha, and tamiḻ), morphosyntactic features (derivational suffixation,

cliticization, development of postpositions, process of grammaticalization etc.,), and etymological features (for the analysis of patronyms and toponyms).

Small Linguistic Corpus

A corpus of written texts can be analysed for different purposes including linguistic, lexicographic, rhetoric and stylistics for instance. Our approach is linguistic and seeks to focus the analysis of our corpus in the social and cultural contexts in which these inscriptions were written and read. This project at this stage is concerned about a small linguistic corpus as opposed to any corpora containing several millions of words (for example, The British National Corpus -10 million words, CIIL Tamil database around 3 Million words and the Cre-A data bank www.crea.in contains 2.5 million words and will be the largest Tamil data bank very shortly). Except these two databases, Tamil does not have any other database to our knowledge.

The total number of Tamil inscriptions discovered to date counts around thirty thousand. Such a large number of inscriptional texts cannot be handled in a single attempt at a stretch mainly because of lack of technical and human resources. The present database "Kalveṭṭu" is conceived in several phases in chronological order. In the first phase, the database includes texts from 0450 A.D. to 0799 A.D. The Tamil-Brāhmī inscriptions are not included in the present project. The first phase of the database comprises mainly Pallava inscriptions, Copper plates and Hero Stone inscriptions (naṭu kal). In our database, incomplete or defective inscriptions and clauses (phrases) are not included. In case of some doubtful inscriptions, we took maximum precaution to check with, whenever possible, original estampage and with inscriptions insitu. We thus have avoided all errors as much as possible.

Tamil Inscriptions

Since the last few decades, the importance of Tamil inscriptions as source material has been recognized, at least to some extent, by researchers in humanities and social sciences. But comprehension, interpretation and information retrieval of Tamil epigraphic texts, no doubt, constitute a major challenge. It is evident from our own experience that a better reading and unambigous interpretation of Tamil inscriptions is possible only through a multidisciplinary approach. Rather, Tamil inscriptions provide source material for constituting a monumental multi disciplinary database.

Language structure

There is a striking difference (in word order) between Modern Tamil and inscriptional Tamil (IT). These deviations offer valuable clues on the historical changes that the grammar of Tamil went through. The purpose of this paper is to bring out the characteristic features of the underlying linguistic system of the inscriptional Tamil. The IT is characterised by an alternative coding system which has resulted from distribution of grammatical patterns motivated by semantic and pragmatic (information structure) parameters

The field of historical syntax can be divided into two parts: the study of the grammars of languages of the past and the study of changes in grammar as attested in the historical record. The first subfield is best considered as a branch of comparative syntax which tries to reconstruct, through textual evidence, the grammars of languages that lack living native speakers. The second subfield studies the problem of the diachronic instability of syntax and the transition between grammars. For this reason, we have chosen to focus on the diachronic aspect of historical syntax in our database.

Scripts

Four different scripts were used in Tamil inscriptions: tamiḻ-brāhmi, vaṭṭeḻuttu, tamiḻ and grantha. We are only concerned with the last three scripts besides the historical, social and cultural contexts of their usage. Broadly speaking, use of vaṭṭeḻuttu and tamiḻ scripts can be explained by historical and political factors. But the use of grantha script implies complex sociolinguistic factors (language contact, bilingualism, cultural and political hegemony and so).

DATABASE - "Kalveṭṭu"

The construction of our extensive database consists of the following four stages: 1) selection and documentation of epigraphic texts, 2) identification of a meaningful sequence of units (minimal clause structures), 3) linguistic, and lexical analysis of clauses (morphology, syntax, borrowings), and 4) translation. Due to the complex structure of epigraphic texts, we have opted for a methodology based on semantics and pragmatics instead of a traditional –subject-object-predicate- approach. In our approach, the text is divided into minimal meaningful units (minimal linguistic structure or "clauses"). Each such minimal unit is subject to a multilevel analysis: morphology, morphosyntax, syntax and semantics.

The database consists of four major components: 1) general information, which is composed of 21 subunits, 2) Tamil inscription in transliteration, 3) translation and 4) linguistic analysis. The fourth part, which is linguistic analysis, is the essential part of the "Kalveṭṭu database". It consists of a list of "words" (any meaningful unit whether segmentable or not). Each "word" is associated with a canonical form (unsegmentable unit- morpheme or lexical unit) and a set of "grammatical categories" (specifying tense, mood, number, gender or other linguistic functions). In our database, we have listed so far 200 different types and subtypes of "grammatical categories". This list is subject to modification depending on a combination of semantic and morphosyntactic functions. A fine-grained analysis of inscriptions necessitates such a vast sub categorisation of different constituents of the identified minimal meaningful units. This will allow the users to view the detailed grammatical and lexical analysis of each minimal meaningful unit identified in our database.

The database can be used for various purposes and to handle many issues, most of them remain unanswered in the study Tamil inscriptions. Some of them may be listed below. To retrieve information about the type and structure of a particular inscription: Whether it is a hero stone, copper plate or temple inscription; whether the inscription contains invocation and meykkīrtti or not; the meykkīrtti is in Sanskrit or in Tamil; where the inscription is situated in the temple physically– on the wall of the main shrine or on the wall of the secondary shrines and finally to calculate the correlation among all of these information.

The usage of grantha script, as mentioned above, is a complex phenomenon. For each identified item, among other information, the script used is also mentioned (vaṭṭeḻuttu, tamiḻ and grantha). This database may shed light on the social and cultural significance of grantha scripts in Tamil inscriptions: whether grantha was used only for Indo-Aryan loan words; whether all Indo-Aryan loan words were marked systematically in grantha, whether there were variation in the usage of grantha between different dynasties on the one hand and on the other hand whether there were variations from one region to another; whether all personal names (kings, king's consorts, chieftains, Brahmans, royal officers, artisans and cultivators etc.) were marked in grantha and is there any social and cultural significances in this pattern. The same analysis is also possible for toponyms.

This database is created principally as a tool for linguistic analysis of inscriptions. Every searchable (identified) item 'word' in this corpus is tagged by its formal category (e.g. proper noun, place noun, post-position, case marker, auxiliary verb etc.) so that users can list all occurrences of specific searchable (or identified) unit in the database.

For instance, a searchable unit like "paṭṭāṉ" can be retrieved in two distinct ways: 1) a list of all occurrences irrespective of its different grammatical functions as finite verb or as participial noun, and 2) it is also possible to retrieve the unit "paṭṭāṉ" distinctly either as finite verb or as a participial noun.

e.g. ēṛaṉ eṛintu paṭṭāṉ (finite verb) "Eran was dead wounded"

akkantai kōṭaṉ toṛu viṭuvittup paṭṭāṉ kal (participial noun) "Akkandai Kotan is killed while liberating the cow herds and this is his memorial stone".

This database provides for each identified "phrase" the order of constituents. This constituent order pattern reveals without doubt that the {SOV} order considered as basic is only a possible word order among other common word order as noticed in Tamil inscriptions.

It is possible to list all case forms and different case functions among the searchable units. This function allows the users to find the functional and semantic variations or evolution for each case morpheme both diachronically and regionally. It is possible to examine the different case functions substituted by the oblique form (genitive or locative) and their morphosyntactic contexts.

Using this database - which is currently used with a Windows application - one can identify all of the main clauses to determine how each clause is constructed. One can also identify all the alternate structures for each clause identified and study the underlying linguistic structure.

Whenever it is difficult to identify the functional category of any unit, a question marker is used to indicate such problems. The final stage of this project will be creation of user-interface to search this database online over the internet.

பல்லூடகவழிப் பழந்தமிழ் இலக்கியக் கருத்தாடல் இலக்கியம் கற்றல் கற்பித்தல் அடிப்படையில்

முனைவர் வா. மு. சே. முத்துராமலிங்க ஆண்டவர்
தமிழ் இணைப் பேராசிரியர்
மு.வ. முதுகலை உயராய்வு மையம்
தமிழ்த் துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை- 30
Email: sethuandu@yahoo.co.in

அயலக ஆய்வறிஞர்களால் ஏற்கனவே செம்மொழியாக ஏற்புப் பெற்றிருந்த தமிழ், நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு 2004ஆம் ஆண்டு இந்தியப் பேரரசால் முறையாக அறிவிக்கப்பட்ட இந்திய மொழி தமிழ். இந்தப் பின்னணியில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அயல்நாட்டு, தாய்நாட்டு அறிஞர்களுக்கும் ஆர்வலகளுக்கும் ஏற்பட்டுள்ளது. இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை முழுமையாகப் பயன்படுத்தி எவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களை பல்லூடகவழி அறிவு நிலையிலும் அறிந்துகொள்ளும் நிலையிலும் பரப்புவதற்குரிய கணினிவழித் திட்டமிடுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

பல்லூடகவழிப் பழந்தமிழ் இலக்கியங்களைக் கருத்தாடல் வழி எவ்வாறு கற்பது, கற்பிப்பது, அதற்கான வழிமுறைகள் என்ன எப்படிச் செயலாற்றுவது?, இதுவரை கணினி சார்ந்து நிகழ்ந்த இலக்கிய, இலக்கணக் கருத்தாக்கங்களை எவ்வாறு வளர்த்தெடுப்பது?, வளப்படுத்துவது போன்ற செய்திகள் இக்கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

முதல் முயற்சியாகப் பல்லூடகவழி சங்கத் தமிழுக்கான குறுவட்டினை உருவாக்கியுள்ளேன். இக்குறுவட்டில் உரையாடல் அடிப்படையில் எல்லா வயதினரும் புரிந்துகொள்ளும் வகையில் சங்க இலக்கியங்களை உருவாக்கியுள்ளோம். அவற்றைப் பின்வரும் மூன்று நிலைகளில் வரையறுக்கலாம்.

1. ஆர்வமூட்டல்

2. அறிவூட்டல்

3. திறந்தநிலை இலக்கியம் கற்பித்தல்

இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள குறுவட்டைக் கணினி அறிஞர்களின் மேலான கருத்துகளுக்காக முன்வைக்கிறோம்.

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட கணினி நுட்பத்தின் ஊடாக வளர்ச்சி அனைத்துத் துறைகளிலும் புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியது. மொழி / இலக்கியம் கற்பித்தலிலும் மாற்றம் ஏற்பட்டு புதிய அணுகுமுறைகளும் வழிமுறைகளும் கண்டறியப்பட்டுள்ளன.

இன்றைய கணினித் தமிழ் வளர்ச்சிக்கு 'உத்தமம்' போன்ற தன்னார்வ நிறுவனங்கள் ஆற்றிய / ஆற்றும் தொண்டு மகத்தானது. தமிழ் இணைய மாநாடுகள் வழி மொழி / இலக்கிய / நுட்ப அறிஞர்களையும், கணினி - நுட்ப அறிஞர்களையும் ஒன்றிணைத்து ஐரோப்பிய மண்ணில், வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாட்டில் பல்லூடக வழியாகப் பழந்தமிழ் இலக்கியக் கருத்தாடல் என்ற தலைப்பில் ஆய்வுச் செய்திகளை முன்வைக்கிறேன்.

மதுரைத் திட்டம், பழந்தமிழ் நூல்களை மின்பதிப்பாக்கம் செய்து மாபெரும் பணியாற்றுகிறது. தமிழ் மரபு அறக்கட்டளை, இலக்கியங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் கன்னித் தமிழைக் கணினித் தமிழாக இணைத்துப் பணியாற்றுகிறது.

மொழி தொடர்பான ஆய்வுகள், ஒலி, ஒலியன், உருபன், தொடர், பொருள் என விரிவடைந்து வருகின்றன. மேலும் இது இலக்கியம் சார்ந்து விரிவடைகிற போது, கரு, நடை, கருத்தாடல் அமைகிறது.

மொழி ஒருவரையொருவர் விளங்கிக்கொள்ளும் ஆற்றல் மிக்க சமூகப் பிணைப்புக்கு இன்றியமையாததாக அமைகிறது. கருத்துத் தொடர்பிலே ஈடுபடுவர்கள், ஒரு மனிதக் குழுவையோ, சமூகத்தையோ, ஒரு பண்பாட்டையோ சார்ந்தவராகக் குறிப்பிடலாம். அவர்கள் யாவரும் தம்முடைய மொழி, பழக்கங்கள், வழக்கங்கள் ஆகியன பற்றிய விதிமுறைகளைப் பின்பற்றி நடப்பவர்கள். அவ்விதிமுறைகளை அவர்களே உண்டாக்கினார்கள். அவர்களே அனுசரித்து நடக்க வேண்டியவர்களாய் உள்ளனர்.

எனவே மொழி வழியாக நடத்தப்படும் கருத்துத் தொடர்பும் சமூக வயப்பட்டது எனப் பெறப்படும் (அ.சண்முகதாஸ், 2006)

என்ற அறிஞரின் கூற்றுப்படி மொழியின் கருத்துத் தொடர்புக்குச் சமூகமே அடித்தளமாக விளங்குகிறது. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் எல்லாம் மொழியாலும் ஏற்படும். பழந்தமிழ் இலக்கியங்களின் ஊடாகக் கற்றுத் தரும்பொழுது சமூகம் சார்ந்த விடயங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்வது இன்றியமையாதது.

தொடர்புபடுத்துகின்ற செய்தி, கருத்து, குறியீடு என்ற மூன்றின்வழி கருத்துத் தொடர்பு நிகழ்த்தலாம். பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்திலேயே கருத்துத் தொடர்புக்கான கூறுகள் இடம் பெற்றிருக்கின்றன.

செப்பும் வினவும் வழால் ஓம்பல்

(தொல்.சொல்.இளம்பூரணம்)

எழுத்து, சொல், பொருள், உரையாடல், கருத்துத் தொடர்புக்கான கூறுகளைச் சேனாவரையரும் இளம்பூரணரும் குறித்துள்ளனர்.

ஒவ்வொரு ஊடகம் சார்ந்து கருத்தாடல் முறைளும் வேறுபடும். வானொலிக்கான கருத்தாடல் நிகழ்த்தும் முறை வேறு.

தொலைக்காட்சி போன்ற காட்சி ஊடகத்தில் நேயர் கருத்துச் சொல்பவரின் முகத்தை நேரில் பார்க்கிறார். ஒரு திரைப்படப் பாடலை வானொலி மூலம் கேட்பதற்கும் தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும் உள்ள வேறுபாட்டினை நாம் இதனோடு தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

வானொலிக் கருத்தாடலில் செவிப்புலன் சார்ந்து கருத்து அரங்கேறுகிறது. ஆனால், தொலைக்காட்சி போன்ற காட்சி ஊடகத்தில் கட் - செவி - புலன் வழியாகக் கருத்தாடல் அரங்கேறுகிறது. பனுவலைக் கருத்தாடல் வழி புரிந்துகொள்ளலாம் என்பதை இதன்வழி நாம் புரிந்துகொள்ளலாம். இதன் அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. மொழி சார் கூறுகள் (verbal)

2. மொழி சாராத கூறுகள (non-verbal)

வானொலி மூலமாக ஒலி வடிவில் சங்கத் தமிழ்க் கருத்தாடல் நிகழ்த்தினால், எந்தப் பகுதியில் வானொலி உரை நிகழ்த்துகிறோமோ, அந்தப் பகுதி மொழியின் வட்டாரத் தன்மையினை நிகழ்த்துபவர் அறிந்திருக்க வேண்டும்.

கேட்கிற வாசகர்களின் மொழியினை நிகழ்த்துநர் பயன்படுத்துவதா அல்லது தகுதமிழ் நிகழ்த்துவதா அல்லது இரண்டும் இணைந்து நிகழ்த்துவதா என்ற சிக்கல் வரும். அதனை மனத்தில் கொண்டு உரையினை நிகழ்த்த வேண்டும். கேட்பவருக்குப் பொருள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வண்ணம் உரை அமைதல் வேண்டும்.

மேலும் வானொலிக் கருத்தாடலுக்கு மொழிசார் கூறுகள் நிறைய இடம் பெற்றிருக்க வேண்டும்.

குரலிலே ஏற்ற இறக்கம், அழுத்தம், பாடலை மேற்கோள் காட்டுதல், குழப்பமில்லாமல் சொல்லுதல் போன்ற அடிப்படையில் வானொலிக் கருத்தாடலைச் சிறப்பாக நிகழ்த்த முடியும்.

திருக்குறளைக் கற்பிக்கிறோம் என்றால், திருக்குறளைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல், நேர ஒழுங்கு, உரையாற்றுதல் குறித்து முன்கூட்டியே திட்டமிடல், கருத்தாடல் நிகழ்த்துவதற்கு

அடிப்படையாகும். மாணவர்களின் வயது, தகுதி, கற்றல் திறன் அடிப்படையில் கருத்தாடல் நிகழ்த்தலாம்.

உரையாடல் முடிவில், தொடர் நிகழ்ச்சியா, தனி நிகழ்ச்சியா என்பது அறிந்து, அதற்கான கருத்தாடல் குறிகள் இடம்பெற வேண்டும்.

தொலைக்காட்சி ஊடகம் போன்றவற்றில் கருத்தாடல் நிகழும்பொழுது, மொழிசாராக் கூறுகளும் மொழிசார் கூறுகளும் இரண்டின் அடிப்படையில் அமைய வேண்டும்.

1. முகபாவனைகள், 2. செய்கைகள், 3. ஒப்பனைகள் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்தினால் காட்சி ஊடாகக் கருத்தாடல் சிறப்பாக அமையும். குறிப்பாக, உடல்சார் மொழி மிக முக்கியம்.

பல்லூடக வழி பழந்தமிழ் இலக்கியங்களைக் கருத்தாடல் முறையில் அணுகும்போது பல சிக்கல்கள் ஏற்படும். அச்சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதாக நம் முயற்சிகள் அமைய வேண்டும்.

குறிப்பாக, சங்கத் தமிழை இன்றைய தமிழாக மொழி மாற்றம் செய்ய வேண்டும். நிகழ்த்துநருக்கும் - கேட்பவருக்கும் சமகாலத் தன்மை / தொடர்பு அமைய வேண்டும்.

குறுவட்டில் பல்லூடக இலக்கியக் கருத்தாடல் நிகழ்த்தும் பொழுது, கண்ணுக்குத் தெரியாத மக்கள் பலரை அது சென்றடையப் போகிறது என்ற நோக்கில் திட்டமிட்டுக் கருத்தாடல் நிகழ்த்த வேண்டும்.

ஆசிரியர் இல்லாத வகுப்பறை அமையலாம். மாணவர்களுக்கு வினா நிரல் தந்து, கற்றல் பணியினை மேம்படுத்தலாம். அடுத்த நிலையில் இணையவழி பழந்தமிழ் இலக்கியங்களை எவ்வாறு கற்கலாம், கற்பிக்கலாம் என முயற்சி செய்ய வேண்டும்.

பல்லூடக வழி பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்பிக்கும் பொழுது ஏற்படும் சிக்கல்களை அறிந்தால்தான் தீர்வுகளுக்கு நாம் திட்டமிட முடியும்.

பனுவலை ஒலி வழியாகக் கற்பிக்கும்பொழுது ஏற்படும் சிக்கல்கள்

பனுவலைக் காட்சி ஊடக வழி கற்பிக்கும்பொழுது ஏற்படும் சிக்கல்கள்

இலக்கியங்களைக் குறுந்தகட்டில் பதிந்து கற்பிக்கும்பொழுது எழும் சிக்கல்கள் இணையவழி கற்பிக்கும்பொழுது ஏற்படும் சிக்கல்கள்

மேற்கண்ட முறைகளில் சிக்கல்கள் இருப்பதைக் கண்டறிய வேண்டும். அதன் அடிப்படையில் கருத்தாடல் அமைந்தால், கற்றல் சிறப்பாக அமையும்.

குறுவட்டில் பல்லூடகக் கருத்தாடல் நிகழ்த்தும்பொழுது, கண்ணுக்குத் தெரியாத நேயர்கள் பலரை இது சென்றடைகிறது என்ற நோக்கத்தோடு நம் உரை அமைய வேண்டும்.

ஆசிரியர் இல்லாத வகுப்பறையில் குறுவட்டின் வழி மாணவர்கள், இலக்கியங்களை எவ்வாறு கற்றுக்கொள்கின்றனர் என ஒரு வினா நிரல் உருவாக்கி, அவர்களைப் பதில் அளிக்கச் செய்து, கருத்தாடல் மூலம் கற்பிக்கும் திறனை மேம்படுத்தலாம்.

தமிழர்கள் மட்டுமில்லாமல், தமிழ் மேல் ஆர்வமுள்ள பிற மொழியினரும் பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்றுக்கொள்வதற்குக் கணினி வழியில் தமிழ் தயாராக இருக்கிறது. நாம் தயாராக இருக்கிறோமா என்பதே கேள்வி.

துணை நின்ற நூல்கள்

1. மொழியும் பிற துறைகளும், அ.சண்முகதாஸ், 2006
2. மொழியும் அதிகாரமும், எல்.இராமமூர்த்தி, 2005
3. கருத்தாடல் ஆய்வு, ந.இளங்கோ, 1996
4. தொல்காப்பியம் சங்கத் தமிழ் புதிய பார்வை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2006
5. தொல்காப்பியம், சொல், தமிழண்ணல், 1996

COMPUTATIONAL LINGUISTICS

தமிழ் வினை வடிவங்கள்: கணினிப் பகுப்பாய்வு

Computer Analysis of Tamil Verb Forms

முனைவர் ப. டேவிட் பிரபாகர்
இணைப் பேராசிரியர் - தமிழ்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை-600 059, இந்தியா
Email: tamilprofessor@gmail.com

Abstract: The aim of computational morphology is to take a string of characters as input and deliver an analysis as output. The input string can be analyzed for underlying morphemes and syntactic interpretation.

As the 'verb' is a dynamic part of a sentence, the present study focuses on both simple (finite and non-finite) and complex verb forms in Modern Tamil. Algorithms have been developed for analysis of all the verb forms, that can be adopted for various Tamil related NLP tasks.

Seven rule sets are developed in the form of flow charts, which can analyze any verb form from right to left, to carve out morphemes and from what is left of the verb, reconstruct the verb root. This work also gives morpho- syntactic interpretation for the given structure. The details regarding data representation, methods and modules are given in the full paper.

மொழியின் பண்புகளைக் கண்டறிய கணினியைப் பயன்படுத்தும் நோக்கிலும் கணினிக்கு மொழி அறிவைப் புகட்டும் நோக்கிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆய்வு 'இயற்கை மொழியாய்வு' எனப்படுகிறது. கணினிக்குச் செயற்கை நுண்ணறிவாற்றலை வழங்கும் முயற்சியின் ஒரு பகுதியாகவும் இது விளங்குகிறது. இதற்கு, இயற்கை மொழியின் அமைப்பு மற்றும் பயன்பாடு பற்றிய இலக்கண நியதிகளை கணினியின் ஏற்புக்குத்தக விதிமுறையாக்கமாக மாற்றியமைக்க வேண்டும். இதனால், இயற்கை மொழிகளிலேயே கணினியோடு உறவாடவும், தேவையான தகவல்களைத் தேவையான வடிவத்தில் பெறவும் வழி ஏற்படும்; மொழி சார்ந்த பல்வேறு பணிகளுக்குக் கணினியைத் துணையாகக் கொள்ளவும் இயலும்.

இலக்கும் நோக்கும்

இக்கட்டுரை, தமிழில் உள்ள வினை வடிவங்களைப் பகுத்து, அவற்றில் உள்ள வினையடிகளையும், அவற்றோடு ஒட்டுமுறையில் இணையும் கூறுகளையும் அடையாளம் காண, கணினியின் ஏற்புத்தன்மைக்கு இயைந்த வழிமுறை வரைவுகளை வழங்குகிறது. இதனைக் காட்சிப்படுத்தவும் முற்படுகிறது. திணை, பால், எண், இட இயைபுகளைப் புலப்படுத்தும் விகுதிகளைத் தமிழ் வினைச்சொற்கள் ஏற்பதால், சொற்றொடர் பற்றிய அமைப்பு ஆய்விலும் வினை வடிவங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. பில்மோரின் வேற்றுமை இலக்கணக் கோட்பாட்டில்,வினையும் வினையோடு வேற்றுமை உறவு கொண்டுள்ள பெயர்களும் முதன்மை உறுப்புகளாகக் கொள்ளப்படுகின்றன. வினைச்சொல் இன்றியமையாத சொல் வகையாக விளங்குவதோடு, சொற்றொடர் பகுப்பாய்விற்கும் அடிப்படையாக விளங்குவதால் வினை வடிவங்களை முதன்மைப்படுத்தி இக்கட்டுரை அமைகிறது.

இக்கட்டுரை, தற்காலத் தமிழில் காணப்படும் எல்லா வகையான வினை வடிவங்களையும் விவரிக்கிறது. வழக்கொழிந்த வடிவங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. வண்ணனை மொழியியலாரின் கொள்கையையொட்டி, சந்தியும் சாரியையும் முறையே இடைநிலையுடனும் விகுதிகளுடனும் இணைந்த நிலையில் பகுப்பு மேற்கொள்ளப்படுகிறது. வலமிருந்து இடமாக மொழிக்கூறுகளைப் பகுத்துக் காணும் வண்ணம் வழிமுறைகளும், எஞ்சிய வினைப்பகுதியிலிருந்து வினையடியினை ஆக்கிக் கொள்ளும் விதித்தொகுப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. பகுப்பை மட்டுமே இவ்வாய்வு இலக்காகக் கொள்கிறது; தோற்றுவிப்புக்கான வழியமைப்புகள் உருவாக்கப்படவில்லை.

ஆய்வு முறை

இவ்வாய்வில், வினையடி, பாலிட விகுதிகள், கால இடைநிலைகள், எதிர்மறை உருபுகள், எச்ச விகுதிகள், பிற ஒட்டுருபுகள் ஆகியன தனித்தனிப் பட்டியலாக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. பகுப்பால் பயனற்ற தனி, வேறு, சரி, பொது ஆகிய வினைகளைக் கணினி முதலில் தேடும். எதிர்மறை ஒட்டை ஏற்காது வினைமுற்று வடிவில் வரும் உண்டு, அல்ல, இல்லை முதலிய வினைகள் தனிப்பட்டியலாக்கப்பட்டுள்ளன. அல், உள், இல், உடை, உரி முதலிய வினைகள் பொதுப்பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளன. குறை வினையடிகள் குறிப்பிட்ட பாலிட விகுதிகளை மட்டும் ஏற்பதால், குறிப்பிட்ட பாலிட விகுதிகள் கண்டறியப்படும்போது மட்டும் குறை வினையடிப் பட்டியல் நோக்கப்படுகிறது.

தனிவினைப் பகுப்பு

தனி வினை வடிவங்களின் முதற்பகுதி வினையடியாக அமைகிறது. விகுதி எதுவும் பெறாத நிலையில் இது ஏவல் வினை எனப்படுகிறது. வினையமைப்பில் மூன்று பகுதிகள் இடம் பெற்றிருந்தால், முதற்பகுதி வினையடியாகவும் நடுப்பகுதி கால இடைநிலைகளையோ எதிர்மறை

உருபுகளையோ கொண்டிருக்கிறது. இறுதிப் பகுதியில் பாலிட விகுதிகளோ, எச்சம், முற்று, எதிர்மறை, தொழிற்பெயர் ஆகியவற்றை உணர்த்தும் விகுதிகளோ அமைகின்றன.

வலமிருந்து இடமாகப் பகுத்துக் கொள்ளப்படும் இவ்வாய்வில், பாலிட விகுதிகள் தவிர்த்த பிற விகுதிகள் முதலிலும் அடுத்து பாலிட விகுதிகளும், அதனைத் தொடர்ந்து கட்டுண்ட மாற்றுப்பெயர் வடிவங்களும் தொகுத்துக் கொள்ளப்படுகின்றன.

விகுதிகள், ஒட்டுகள் படிப்படியாகப் பகுக்கப்பட்டு எஞ்சிய வினைப் பகுதியிலிருந்து விதிகள் மூலம் வினையடி பெறப்பட்டு, வினைப்பட்டியலில் ஒப்பு நோக்கப்படுகிறது. முறை சாரா வினையடிகளும் விதிகளின் மூலமே பெறப்படுகின்றன.

வினையடிகளைப் பெற உதவும் ஏழு விதித்தொகுப்புகள் இவ்வாய்வில் உருவாக்கப்பட்டுள்ளன. பகுக்கப்படும் ஒட்டு அல்லது விகுதிக்கேற்ப இவ் விதித்தொகுப்புகளில் ஒன்று செயல்படும். வினையடியும் பகுக்கப்பட்ட ஒட்டு அல்லது விகுதியும் கொண்டுள்ள அமைப்பையொட்டி, அதற்கு இலக்கண வரைவு வழங்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கண வரைவுகளுக்கு இடமளிக்கும் ஒத்த அமைப்புகளுக்குத் தொடரியல் அடிப்படையில் தீர்வு காணப்பட்டுள்ளது.

வினை வடிவங்களின் அமைப்பும் இலக்கண வரையறையும்

'Ø' இறுதி

வினையடி + Ø	ஏவல்

'அ' இறுதி

வினையடி + அ	செயவென் எச்சம்
வினையடி + இறப். உருபு+அ	இறந்தகாலப் பெயரெச்சம்

வினையடி + நிகழ். உருபு+அ	நிகழ்காலப் பெயரெச்சம்
வினையடி + எதிர். உருபு+அ	எதிர்மறைப் பெயரெச்சம்
வினையடி + க/க்க	வியங்கோள்

'ஆ' இறுதி

வினையடி + ஆ	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்/பலவின் வினைமுற்று

'இ' இறுதி

வினையடி + இ	வினையெச்சம்

'உ' இறுதி

வினையடி + இறப். உருபு+உ	வினையெச்சம்
வினையடி + ஆத்+அது	எதிர்மறைத் தொழிற்பெயர்/ எதிர்மறை வி.அ பெயர்
வினையடி + ஆ+து	எதிர்மறை வினையெச்சம் / ஒன்றன்பால் எதிர்மறை வி.மு

'ஐ' இறுதி

வினையடி + இறப். உருபு+அமை	தொழிற்பெயர் (வந்தமை)
வினையடி + நிகழ். உருபு+அமை	தொழிற்பெயர் (வருகின்றமை)
வினையடி + இறப். உருபு+அமை	எதிர்மறைத் தொழிற்பெயர் (வராதமை)

'ம்' இறுதி

வினையடி + ம்	ஏவல்(மரியாதை ஒருமை)/ எதிர்கால வினைமுற்று/ எதிர்காலப்பெயரெச்சம்
வினையடி + உம்	ஏவல்(மரியாதை ஒருமை/பன்மை)
வா/தா +உம்	ஏவல்(மரியாதை ஒருமை/பன்மை)
வினையடி + அவும்	பொது ஏவல்/ எச்சம்
வினையடி + (க்)கும்	எதிர்கால வினைமுற்று/ எதிர்காலப்பெயரெச்சம்
வினையடி + அட்டும்	வினைமுற்று(இசைவு)
வினையடி + ஆத் +ஏயும்	எதிர்மறை ஏவல்
வினையடி + இறப். உருபு+அதும்	வினைமுற்று(தொடர் நிகழ்வு)
வினையடி + அலாம்	வினைமுற்று(சாத்தியம்)

'ய்' இறுதி

ஆ/போ +ய்	வினையெச்சம்

'ல்' இறுதி

வினையடி + இறப். உருபு+ஆல்	நிபந்தனை எச்சம்
வினையடி + ஆ+மல்	எதிர்மறை வினையெச்சம்
வினையடி + -(க்)கையில்	உடன் நிகழ்வு எச்சம்
வினையடி + -அல்/ (த்)தல்	தொழிற்பெயர்

'ள்' இறுதி

வினையடி + -(உ)ங்கள் ஏவல்(மரியாதை ஒருமை/பன்மை)

பாலிட விகுதிகளும் கட்டுண்ட மாற்றுப்பெயர்களும் இறுதியில் அமைதல்

வினையடி + இறப். உருபு+பாலிடவிகுதி இறந்தகால வினைமுற்று
வினையடி + நிகழ். உருபு+ பாலிடவிகுதி நிகழ்கால வினைமுற்று
வினையடி + எதிர். உருபு+ பாலிடவிகுதி எதிர்கால வினைமுற்று
(உயர்திணை)
வினையடி + பாலிடவிகுதி (உயர்திணை) எதிர்மறை வினைமுற்று
வினையடி + ஆத்+ பாலிடவிகுதி(ஆய் ஒழிந்த..மு.வி)எதிர்மறை ஏவல்
வினையடி + காலஉருபு+அவன்/அவள்/அவர்/அவை வினையாலணையும் பெயர்
வினையடி + ஆத்+அவன்/அவள்/அவர்/அவை வினையாலணையும் பெயர்
(எதிர்மறை)

கூட்டுவினைப் பகுப்பு

கணினிய நோக்கில் துணைவினைகளின் பட்டியல் சிறியதாக அமைவதால், ஒவ்வொரு துணைவினையையும் எடுத்துக்கொண்டு அதன் வருகை, ஏற்கும் அலகுகள், கட்டுப்பாடுகள் முதலிய குறிப்புகளைக்கொண்ட விவரத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. கலப்பு வினையடிகள் நேரடியாக வினைப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

கூட்டுவினை அமைப்பில் வலப்புறத்தில் அமைந்துள்ள வினை முதல் வினையாகக் கொள்ளப்படுகிறது. தனிவினைப் பகுப்பிற்கான விதித்தொகுப்புகளைப் பயன்படுத்தி முதல் வினையைப் பகுக்க இயலும். முதல் வினை பகுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, வினைகளுக்கிடையே அமையும் ஒற்று, உடம்படுமெய், இடைச்சொற்கள் ஆகியவற்றைப் பகுத்துக் கொண்டு, அடுத்தடுத்த வினைகளை கண்டறியும் பொது வழியமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. வினைகள் இடைவெளியின்றி அமைந்திருக்கக் கூடும் இந்நிலையில், எஞ்சிய வினைப் பகுதியிலிருந்து ஒவ்வொரு எழுத்தாக எடுத்துக்கொண்டு வினைப்பட்டியலில் தேட வேண்டும். ஓரெழுத்து வினையாக இருப்பின் அது நெடிலாகவே அமைகிறது. ஒன்றிலிருந்து நான்கெழுத்தை மேல் எல்லையாகக் கொண்டே தமிழில் வினைச் சொற்கள் அமைகின்றன. அ, ஆ, இ, ஈ, உ, ஐ, ஓ, ண், ய், ர், ல், ள், ழ் ஆகிய எழுத்துகளையே தமிழ் வினையடிகள் இறுதியாகக் கொள்கின்றன. இந்நிலையில் மட்டும் நேரடியாக வினைப்பட்டியலில் தேட வேண்டும்.பிற ஈறுகளைக் கொண்டிருப்பின் பொருத்தமான விதித்தொகுப்பைப் பயன்படுத்தி தமிழில் வினையடியைக் காண வேண்டும். அசை அமைப்பைக் கொண்டும் படிப்படியாக வினையடிகளைப் பிரித்தெடுக்கும் வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Dravidian Wordnet

Dr.S.Rajendran
Professor & Head, Department of Linguistics,
Tamil University, Thanjavur 613010,
Email: raj_ushush@yahoo.com

Abstract: Languages work as an integrated and interconnected system. Basically it connects the world with the human brain. The conceptualization of the world by perception and naming results in building the basic units of language, the words. This becomes the input into the brain from which the output of communication is made. Human beings more or less look at the world with similar experience and make abstractions about the world by conceptualization so that it is possible for them to exchange their ideas without difficulty. Language works at different levels between sounds, words and sentences. As sounds do not have meaning on its own human beings depend on words as basic units of communication. We visualize, conceptualize and name things based on our conceptual percepts. While doing so we make classifications of the objects of the world depending on their physical and telic properties. The psychology behind the abstraction leads to typology which in turn turned into ontology. That is the reason the base of WordNet's is ontology.

WordNet is a nonlinear lexical structure based on semantic features of individual words. It allows linking one word to another in a more meaningful way than in a conventional dictionary or thesaurus, since every word shares one or more of semantic features with the other in a language.

The primary use of wordNet is making use of it as a multilingual information accessing system through lexical items. The WordNet by its nature turns to be an ideal lexical accessing system as it links concepts with another concept by multifarious meaning relations. The wordNet is a lexical data base which has many practical utilities. One of them is to use of wordNet for translation. WordNet not only links one concept with another concept through semantic relations, but also captures the contextual meaning variations of a particular word i.e. the polysemy of a word. The wordNet has amble scope to link meaning with a context there by capturing the different meanings of a word contextually.

Development of Dravidian WordNet is an on-going project activity shared by Tamil University at Thanjavur, Amrita Vishwa Vidyapeetham at Coimbatore, and Dravidian University at Kuppam. The main objectives of the project are:

- Developing an extensive and high quality multilingual semantic lexical database for Dravidian languages
- Developing language-independent set of semantic concepts linking the language networks together
- Standardizing semantic classification of information for all Dravidian languages and providing resources for development of applications

International Status

WordNet was originally conceived and developed as a lexical database for English on the basis of psycholinguistic properties. The major lexical categories like nouns, verbs, adjective and adverbs are

organized in terms of sets of synonyms (synsets), each representing a lexical concept. A synset is a set of synonyms (word forms that have to the same or similar meaning) and two words are said to be synonymous if their mutual substitution does not alter the truth-value of a given sentence in which they occur, in a given context. For example, {car; auto; automobile; machine; motorcar} form a synset because they can be used to refer to the same concept. These synsets are interconnected by certain relations - lexical relations such as synonymy, antonymy, and semantic relations such as hyponymy (between specific and more general concepts) and meronymy (between parts and wholes).

The success of the English WordNet has paved way for the emergence of several projects with the aim of constructing WordNets in various languages and developing multilingual WordNets. EuroWordNet, a conglomeration of WordNets in European languages is an important project that has come up with a multilingual WordNet.

Dravidian WordNet

Dravidian WordNet is a natural chunk in the Indo-WordNet. It is only ideal that we should have Dravidian WordNet before we develop a larger Indo-WordNet, because the genetic relationship among the Dravidian languages can be maximally exploited in a more natural way. It allows, for example, a search tool to infer other terms, from the terms provided by the user and coming up with the most optimal search for retrieving information.

Among Indian languages, Dravidian languages such as Tamil, Telugu, Kannada and Malayalam share a number of lexicalized concepts in terms of morphology and semantics besides others as in typological and culture-specific features. Building a common WordNet for this family of languages makes it easier the task of developing an IndoWordNet.

